**சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந்திகதிய பிஈடீ/12 இலக்க பொது முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின்படி நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்திருக்க வேண்டிய சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 11 இலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களிற் காட்டப்பட்ட ரூபா. 23,784,462 கூட்டுமொத்தமான நிலையான சொத்துக்களின் பெறுமதி புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நிதிப்பிரமாணம் 756 இன்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இச்சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய சுவாமி விபுலாநந்தா இசை நடனக் கல்லூரியின் காணி, கட்டிடம் என்பவற்றின் பெறுமதி மீள் விலைமதிக்கப்பட்டுக் கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) உத்தியோகத்தர்களால் அவர்களுடைய அலுவலக பயணத்திற்காக பொது போக்குவரத்து சேவைகைக் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஆட்டோ கட்டண மீளளிப்பாக பல உத்தியோகத்தர்களிற்கு ரூபா 83,062 தொகையான ஆட்டோ கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 782,849 தொகையான நானாவித முற்பணங்கள் உறுதிப்படுத்தப்பட்டு கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2008 இலிருந்து நிதிக் கூற்றுக்களில் முற்கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஆ) விபுலானந்தா கொண்டாட்ட நாள் தொடர்பில் ரூபா 15,752 பெறுமதியான நிதிகள் உறுதிப்படுத்தப்பட்டு கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறவேண்டியவையாக நிதிக் கூற்றுக்களில் முற்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) ரூபா 43,356 தொகையான பிடிகாசு, தீர்ப்பனவு செய்யப்பட்டோ அல்லது கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் 2008 இலிருந்து நிதிக் கூற்றுக்களில் முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்களிடம் இருந்து 2010 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 357,089 தொகையான கடன் அறவீடுகள் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியவையாக உள்ள ரூபா 1,207,583 ஆன கடன் மீதியில் ஈடு செய்வதற்கு இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 712,808 தொகையான ஏனைய செலவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

(ஆ) ரூபா 376,257 பெறுமதியான 17 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப்பிரமாண இல் 136 இன்படி நிறுவகத்தின் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 30,829,000 ஆன அரசாங்க மானியங்களை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 1,484,826 ஆன தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்காகப் பெறப்பட்ட ரூபா. 19,190,00 ஆன அரச மானியத்தைக் கணக்கில் எடுத்த பின்னரான ரூபா. 5,148,286 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் அது நிதிசார் விளைவுகளில் ரூபா. 3,663,460 ஆன் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

### 2.2 செயலாற்றல் மீளாய்வு

### 2:2:1. கல்விசார் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நடத்தப்பட்ட பரீட்சைகள்**

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | நூணசித்தி/ தோற்றியுள்ள மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சங்கீதம் | 98 | 76 | 22 |
| நடனம் | 67 | 34 | 33 |
| நாடகமும் அரங்கமும் | 94 | 65 | 29 |
| கட்புலன் மற்றும் தொழில்நுட்பக்கலைகள் | 46 | 23 | 23 |

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

நிறுவகத்தின் 04 கற்கைநெறிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 529 ஆகும். மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா. 32,822,560 ஆகும். மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவருக்கான சராசரி மீண்டெழும் கிரயம் ரூபா. 62,046 ஆகும்.

**(இ) மகாபொலவும் உதவிப்பணமும்**

மீளாய்வாண்டின் போது உதவிப்பணமாக 451 மாணவர்களுக்கு ரூபா. 8,918,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மகாபொலவாக 02 மாணவர்களிற்கு ரூபா. 32,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2:3 கொள்வனவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தின் பிராந்திய கொள்வனவுக் குழு 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 2.7.7 ஆம் பிரிவின் படி 3 உறுப்பினர்களிற்குப் பதிலாக 2008 மார்ச் 28 இன் சபைத் தீர்மானத்தின்படி 4 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

(ஆ) கூட்டக் குறிப்புக்களில் கொள்வனவு செய்ய வேண்டிய விடயங்களின் அளவைக் குறிப்பிடாமல் பிராந்திய கொள்வனவுக் குழுவின் (ஆர்பிசீ) அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 6,722,991 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன்பின்னர் துணைவேந்தரிடமிருந்து மூடு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(இ) ஒவ்வொன்றும் ரூபா 5,778 இல் வயருடன் கூடிய 11 ஒலிவாங்கிகளின் கொள்வனவிற்காக தனியார் வழங்குனர் ஒருவரிற்கு ரூபா 63,558 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 2.14.1 ஆம் பிரிவின் படி கேள்வி / கூறுவிலை நடைமுறைகளைப் பின்பற்றாமல் 2010 ஆகஸ்ட் 30 இல் வயருடன் சேர்ந்த 11 ஒலிவாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் வயருடன் சேர்ந்த 06 ஒலிவாங்கிகளிற்கே பிராந்திய கொள்வனவுக் குழு கூட்டத்தில் மூடு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட உபகரணம் ‘‘ஏஎச்யூஜேஏ’’ வியாபார குறியீட்டு உபகரண அதிகாரமளிக்கப்படாத பதிவு செய்யப்பட்டிருக்காத முகவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 நிதி முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழங்குனர்களின் பெயர்களில் எழுதப்பட்ட ரூபா 5,804,719 பெறுமதியான 43 காசோலைகள் நிறுவகத்தின் களஞ்சியக் காப்பாளர் மற்றும் சிரேஸ்ட உதவிப் பதிவானரால் (எஸ்ஏபி) கையேற்கப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட வழங்குனருக்கு காசோலைகளை நேரடியாக தபாலிலிடுவதற்குப் பதிலாக அவர்களால் வழங்குனர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பல்வேறு நோக்கங்களிற்காக 7 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 96,055 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அவை குறிப்பிடத்தக்க தாமதத்துடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் பதிவேட்டு விடயங்கள்

(ஆ) கொள்வனவுகள்

(இ) கணக்கீடு